Koviloor Digital Library

காரியசித்தி மாலை

Acc. No. 34051



Koviloor Digital Library

Acc No: 34051

Koviloor Digital Library

காரிய சித்தி மாலை

[விநாயகர் ஸ்லோகம், அகவல், கவசங்கள் அடங்கியது]

தொகுப்பு
பதஞ்சல

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No.

ஸ்ரீ தூய பிரசுரம் பிர
22, மங்கேஷ் தெரு
தி. நகர் சென்னை—17

விலை. ரூ. 1.25

Koviloor Digital Library

முதற் பதிப்பு: மார்ச்சு 1988
வடிவமைப்பு உரிமை: கீதா பிரசுரம் பிரஸ்

கிடைக்குமிடம்: பாரதி பதிப்பகம்
108, உஸ்மான் சாலை
தி. நகர், சென்னை—17.

எங்களிடம் கிடைக்கும் மற்ற நூல்கள்:

1. ஆச்சார்ய சுவாமிகளின் அருள்வாக்கு (காஞ்சிப் பெரியவரின் அருள்மொழிகள்) ரூ. 4-00
2. வரம் தரும் சந்தோஷி மாதா ரூ. 3-50
3. மந்த்ராலய மகான் ஸ்ரீராகவேந்திரர் மகிமை ரூ. 3-50
4. அம்மன் ஸ்தோத்திரங்கள் ரூ. 1-25

ஸ்ரீவோதயம் பிரஸ், சென்னை

Koviloor Digital Library

காரிய சித்தி மாலை

வாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்— உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

சகல காரியங்களிலும் சித்தி பெற யானை முகனைத் துதித்து இந்தப் பாடலைப் பாடினால் ஒருவர் தான் எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.

1. பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ

Koviloor Digital Library

சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தக வருமோ
அந்த் இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகும் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுதும் எவனருளால்
[illegible]ரிவி [illegible] செனமாயும்

Koviloor Digital Library

தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனுல் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்ருேம்.

4. மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்திஞனும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்ருேம்.

Koviloor Digital Library

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றும்.

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்

Koviloor Digital Library

போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றும்.

7. மண்ணின் ஓர் ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றும்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றும்.

8. பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பசா அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்?

Koviloor Digital Library

பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றும்.

இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டுநாட்கள் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி விரத தினத்தன்று எட்டு முறை பாடினுல் எட்டுச் சித்திகளும் கைகூடும்.

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்

Koviloor Digital Library

பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்

Koviloor Digital Library

பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

Koviloor Digital Library

ஆருதாரத்து அங்குச நிலையும்
பேரு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்

Koviloor Digital Library

எண்முக மாக இனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியென்செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி

Koviloor Digital Library

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்குஅப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

இந்த அகவலைப்பாடி விநாயகரைப் பூசித்த ஔவையாரை, கைலாயத்தில் 'ஆதியுலா' அரங்கேற்றத் தூக்கு, விநாயகர் தன் துதிக்கையால் எடுத்துச் சென்று, சேரமான் பெருமாள் நாயனார் அங்கு செல்லுமுன்னரே சேர்ப்பித்தார். எனவே இந்த அகவலைப் பாடுபவர் எடுத்த காரியத்தை மிக விரைவிலேயே நிறைவேற்றுவார்கள்.

Koviloor Digital Library

ஸ்லோகம்

ஸிம்ஹப்ரஸேனம் அவதீத ஸிம்ஹோ ஜாம்பவதா ஹத:
ஸுகுமார: மாரோ (அ) தி: தவ: யேஷ: ஸ்யமந்தக:

இந்த ஸ்லோகத்தை விநாயகர் சதுர்த்தி அன்று சொல்கிறவர்களுக்கு வருஷம் முழுதும் எந்த சுக்லபட்ச சதுர்த்தியில் சந்திரனைக் கண்டிருந்தாலும் அந்த தோஷம் பரிகாரம் அடைகிறது.

விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க
வாய்த்த சென்னி
அளவுபடா வதிகசவுந் தரத்தகம தோற்கடர் தாம்
அமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய காசிபர் காக்க
புருவந் தம்மைத்

Koviloor Digital Library

தளர்வின் மகோ தரர்காக்க தடவிழிகள் பாலச்சந்
திரனுர் காக்க
கவின் வளரும் அதரங்கச முகங்காக்க தாலங்கணக்
கிரீடர் காக்க.
நவில்சி புகம் கிரிசைசு தர்காக்க நனிவாக்கைவி
நாயகர் தாங் காக்க.
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளெழிற் செஞ்செவி
பாச பாணி காக்க.
தவிர் தலுரு திளங் கொடிபோல் வளர்மணி நாசியைத்
சிந்திதார்த்தர் காக்க.
காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க களம்
கணேசர் காக்க.
வாமமுறுமிரு தோளும் வயங்குகந் தபூர்வசர் தாம்
மகிழ்ந்து காக்க.

Koviloor Digital Library

ஏமமுறு மணிமுலை விக்கின விநாயகன் காக்க.
இதயந் தன்னைத்
தோமகலுங் கண நாதர் காக்க அகட்டினைத் துலங்கே
ரம்பர் காக்க.
பக்க மிரண்டையுந் தராதரர் காக்கப் பிருட்டத்தைப்
பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கி லிங்கம் வியாள
பூடணர்தாங் காக்க.
தக்க குய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க சக
னத்தை யல்லல்
உக்க கணபன் காக்க ஊருவை மங்கள மூர்த்தி
யுவந்து காக்க.
தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க விருபதமேக
தந்தர் காக்க.

Koviloor Digital Library

வாழ் கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க முன்கையை
வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க விரல்பதும
வத்தர் காக்க.
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க கிழக்கினிற்
புத்தீசர் காக்க.
அக்கினியிற் சித்தீசர் காக்க உமா புத்திரர்தென்
ஞசை காக்க
மிக்கநிருதி யிற்கணேசுரர் காக்க விக்கினவர்த்
தனர்.மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற் கசகன்னன் காக்க
திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க வடகிழக்கி லீசாந்
தனரே காக்க.

Koviloor Digital Library

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க விரவினுஞ் சந்தி
யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க இராக்கதர்பூத
முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத் தால்வருந்துயரு
முடிவிலாத
வேக முறு பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர் தாம்
விரைந்து காக்க.
மதிஞானம் தவம்தான மானமொளி புகழ் குலம்வண்
சரீர முற்றும்
பதிவான தனம்தானி யங்கிரகம் மனைவிமைந்தர்
பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க காமர் பவுத்
திரர் முன்னுன

Koviloor Digital Library

விதியாருஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க.
வென்றி சீவி தங்கபிலர் காக்க கரியாதி யெலாம்
விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக் காலமுமோ திடினும்பா
லிடையூ றொன்றும்
ஒன்றுறு முனிவரர்கா ளறிமின்கள்யாரொருவ
ரோதினுலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச் சிரதேக
மாகி மன்னும்.

விநாயகர் கவசம் முற்றிற்று.

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள்
முழுது அகற்றும் முகத்தி ஞனே

Koviloor Digital Library

அற்பசுகத்து எனை அழுத்தா ஐங்கரனைப்
பிற்பவமும் அகற்றும் கோவைச்
சொற் பொழுது புரியாத வணிகர்குலம்
தினம் பணியும் துணைத்தா ளானை
கற்பகத்தின் மிடி அகற்றும் கற்பகம்ஆம்
விநாயகனைக் கருத்துள் வைப்பாம்.

—கோவிலூராண்டவர்

முப்பத்திரண்டு வகைப் பிள்ளையார்

1 பால விநாயகர்
2 தருண விநாயகர்
3 பக்தி விநாயகர்
4 வீர விநாயகர்
5 சக்தி விநாயகர்
6 துவிஜ விநாயகர்
7 சித்தி விநாயகர்
8 உச்சிஷ்ட விநாயகர்
9 விக்ன விநாயகர்
10 க்ஷிப்ர விநாயகர்

Koviloor Digital Library

11 ஹேரம்ப விநாயகர்
12 லக்ஷ்மி விநாயகர்
13 மகா விநாயகர்
14 விஜய விநாயகர்
15 நிருத்ய விநாயகர்
16 ஊர்த்துவ விநாயகர்
17 ஏகாட்சர விநாயகர்
18 வர விநாயகர்
19 திரயாட்சர விநாயகர்
20 க்ஷிப்ரபிரசாத விநாயகர்
21 ஹரித்ரா விநாயகர்
22 ஏகதந்த விநாயகர்
23 சிருஷ்டி விநாயகர்
24 உத்தண்ட விநாயகர்
25 ரணமோசன விநாயகர்
26 துண்டி விநாயகர்
27 துவிமுக விநாயகர்
28 திரிமுக விநாயகர்
29 சிம்ம விநாயகர்
30 யோக விநாயகர்
31 துர்க்கா விநாயகர்
32 சங்கடஹர விநாயகர்

Koviloor Digital Library

1. பால விநாயகர்

மாம்பழம், வாழைப் பழம், கரும்பு, பலாப் பழம் ஆகிய வற்றை தாங்கிய நான்கு கைகளும் ஒற்றை முகமும் துதிக்கையில் மோதகமும் உடைய இளஞ் சிவப்பு மேனியர்.

2. தருண விநாயகர்

ஒடித்த தந்தம், விளாம்பழம், கரும்புத்துண்டம், அங்குசம், பாசம், நெற்கதிர், நாவற்பழம், மோதகம் ஆகியவற்றைத் தாங்கிய எட்டுக் கைகளும் ஒற்றை முகமும் உடைய செந்நிற மேனியர்.

3. பக்தி விநாயகர்

மாம்பழம், வாழைப் பழம், தேங்காய், பாயசக் கலசம், தாங்கிய நான்கு கரங்களும், ஒற்றை முகமும் உடைய சாம்பல் நிற மேனியர்.

Koviloor Digital Library

4. **வீர விநாயகர்**

அம்பு, அங்குசம், மழு, குந்தாலி, சம்மட்டி, சூலம், வாள், சக்கரம், சங்கு, கேடயம், கதை, கொடி, பாசம், நாகம், வேல், வில் ஆகியவற்றைத் தாங்கிய பதினாறு கரங்களும் ஒற்றை முகமும் சிவந்த உடலும் உடையவர்

5. **சக்தி விநாயகர்**

அபயம், அங்குசம், பாசம் மூன்று கரங்களில் விளங்க, இடது கீழ்க்கரத்தால் பசிய நிறமுள்ள தேவியை அணைத்துக்கொண்டு வீற்றிருக்கும் ஒற்றை முகமுடைய சிவந்த மேனியர்.

6. **துவிஜ விநாயகர்**

அக்கமாலை, தண்டம், கமண்டலம், ஏடு ஆகியவற்றை யுடைய நான்கு கரங்களும் சந்திரன் போன்ற நிறமும் நான்கு முகமும் உடையவர்.

Koviloor Digital Library

7. சித்தி விநாயகர்

மாம்பழம், பரசு, கரும்புத்துண்டம், மலர்க்கொத்து ஆகியவற்றை கொண்ட நான்கு கரங்களும் துதிக்கை யில் எள்ளுருண்டையும் ஒற்றை முகமும் பசும்பொன் நிறமும் உடையவர்.

8. உச்சிஷ்ட விநாயகர்

அக்கமாலை, மாதுளம்பழம், நீலோற்பலம், நீலோற் பலம், நெற்கதிர், வீணை ஆகியவற்றைத் தாங்கிய ஆறு கரங்களும் ஒற்றை முகமும் மாதொருத்தியின் யோனி யில் வைத்தடைத்த துதிக்கையும் உடைய நீல மேனியர்.

6. விக்ன விநாயகர்

தந்தம், மலரம்பு, சக்கரம், பரசு, பாசம், சங்கு, கரும்பு வில், பூங்கொத்து ஆகியவற்றைத் தாங்கிய எட்டுக் கைகளும் ஒற்றை முகமும் உடைய பொன்னிற மேனியர்.

Koviloor Digital Library

10. க்ஷிப்ர விநாயகர்

தந்தம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி ஆகிய வற்றைத் தாங்கிய நாற்கரங்களும் துதிக்கையில் இரத்தின கும்பமும் ஒற்றை முகமும் உடைய செவ்வரத்தம் பூ நிறத்தவர்.

11. ஹேரம்ப விநாயகர்

அபயம், பழம், தந்தம், அக்கமாலை, பரசு, பாசம், சம்மட்டி, மலர்மாலை, மோதகம், வரதம் ஆகியவற்றை யுடைய பத்துக் கரங்களும், ஐந்து தலையும் கொண்டு சிங்க வாகனத்தில் அமர்ந்த கரிய மேனியர்.

12. லக்ஷ்மி விநாயகர்

கனி, மாதுளம் பழம், மாணிக்க கும்பம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, வாள், வரதம் ஆகியவற்றை

Koviloor Digital Library

யுடைய எட்டுக் கைகளும் ஒளி முகமும் நீலமர் பிடித்த இரு தேவியரையுடைய வெண்ணிற மேனியர்.

13. மகா விநாயகர்

மாதுளம் பழம், கதை, கரும்புவில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம் ஆகியவற்றை யுடைய ஒன்பது கரங்களும் பத்தாவது கையில்தாமரை மலர் பிடித்த கையுடன் கூடிய தேவியைத் தழுவிக் கொண்டும், துதிக் கையில் ரத்ன கலசத்தை ஏந்திக் கொண்டும், ஒரு முகமும் முக்கண்ணும் பிறைமுடியும் உடைய சிவந்த மேனியர்.

14. விஜய விநாயகர்

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றையுடைய நான்கு கைகளும் ஒற்றை முகமும் உள்ளவராய்ச் செந்நிற மேனியராய், மூஷிக வாகனத்தில் அமர்ந்தவர்.

Koviloor Digital Library

15. நிருத்த விநாயகர்

பாசம், அங்குசம், அப்பம், கோடரி, தந்தம், வீசிய கையுடைய ஆறு கைகளும், ஊன்றிய இடக்காலும் தூக்கிய வலக்காலும் உடைய நடனமாடும் பொன்னிற மேனியர்.

16. ஊர்த்துவ விநாயகர்

செங்கழுநீர் மலர், நெற்கதிர், தாமரைமலர், கரும்புவில் அம்பு, தந்தம் ஆகியவற்றையுடைய ஆறு கைகளும் ஒரு முகமும் பச்சை நிறமுடைய தேவியைத் தழுவிக் கொண்டிருக்கும் பொன்னிறமேனியர்.

17. ஏகாட்சர விநாயகர்

மாதுளம்பழம், அங்குசம், பாசம், வரதம் உடைய நான்கு கைகளுடன் கூடியவர்; குட்டைக்கைகளும் குட்டைக்

Koviloor Digital Library

கால்களும் உடையவர்; தாமரை ஆசனத்தில் இருப்பவர், செம்பட்டுடையும், செம்மலர் மாலையும் அணிந்த செந்நிற மேனியும், பிறைமுடியுடனும் முக்கண்ணுடனும் கூடிய ஒற்றை முகத்தர்.

18. வர விநாயகர்

ஒற்றை முகமும், முக்கண்ணும், பிறைமுடியும், பாசம், அங்குசம், தேன் கிண்ணம், துவஜம் உடைய நான்கு கைகளும் கொண்ட செந்நிற மேனியர்.

19. திரயாட்சர விநாயகர்

ஒற்றை முகமும், ஆடும் காதுகளில் சாமரம் என்னும் அணிகளும், தந்தம், அங்குசம், பாசம், மாம்பழம் உடைய நான்கு கரங்களும் துதிக்கையில் மோதகமும் கொண்ட பொன்னிற மேனியர்.

Koviloor Digital Library

20. க்ஷிப்ரபிரசாத விநாயகர்

ஒற்றை முகமும், முக்கண்ணும், பிறையுடையசடை முடியும், பாசம், அங்குசம், கற்பகக்கொடி, தாமரை, தருப்பை, வரதம் உடைய ஆறுகைகளும், துதிக்கையில் மாதுளம் பழமும் கொண்ட சிவந்த மேனியர்.

21. ஹரித்ரா விநாயகர்

பாசம், அங்குசம், மோதகம், தந்தம் ஆகியவற்றைத் தரித்த நான்கு கைகளும் ஒற்றை முகமும் உடைய மஞ்சள் நிறத்தவர்.

22. ஏகதந்த விநாயகர்

பெருவயிறும், ஒற்றை முகமும், தந்தம், அக்கமாலை, கோடரி, லட்டுகம் ஆகியவற்றையுடைய நான்கு கரங்களும் கொண்ட நீல நிறத்தவர்.

Koviloor Digital Library

23. சிருஷ்டி விநாயகர்

தந்தம், அங்குசம், பாசம், மாம்பழம் ஆகியவற்றை யுடைய நான்கு கரங்களும் ஒற்றை முகமும் கொண்டு, பெருச்சாளி வாகனத்தில் அமர்ந்த செந்நிற மேனியர்.

24. உத்தண்ட விநாயகர்

நீலோற்பலம், தாமரை, மாதுளம் பழம், கதை, தந்தம், கரும்புவில், நெற்கதிர், பாசம், மலர்மாலை ஆகிய ஒன்பதை ஒன்பது கைகளிலும் ரத்ன கும்பத்தைத் துதிக்கையிலும் தாங்கிக்கொண்டு இடது பக்கத்தில் தன் வலக்கரத்தில் தாமரையைப் பிடித்துக் கொண்டு வீற்றிருக்கும் பச்சை நிறமுள்ள தேவியை இடது கையில் தழுவிக் கொண்டும் உள்ள ஒற்றைமுகத்தரான செந்நிற மேனியர்.

Koviloor Digital Library

25. ரணமோசன விநாயகர்

தந்தம், அங்குசம், பாசம், நாவற்பழம் ஆகியவற்றை ஏந்திய நாற்கரமும், ஒருமுகமும் வெண்பளிங்கனைய நிறமும் உள்ளவர்.

26. துண்டி விநாயகர்

தந்தம், அக்கமாலை, கோடரி, ரத்தின பாத்திரம் ஆகியவற்றை ஏந்திய நாற்கரமும் ஒருமுகமும் உடையவர்.

26. துவிமுக விநாயகர்

தந்தம், அங்குசம், பாசம், ரத்ன பாத்திரம் ஏந்திய நாற்கரமும் இருமுகமும் உடையவர் செந்நிற ஆடையும்; ரத்தின கிரீடமும் தரித்தவர்.

27. திரிமுக விநாயகர்

கூர்மையான அங்குசமும், அக்கமாலையும், வரதமும் உள்ள மூன்று வலக்கரங்களையும், பாசம், அமுதகலசம்

Koviloor Digital Library

அபயம் உள்ள மூன்று இடக்கரங்களையும் உடையராய் தங்கமயமான தாமரைப் பீடத்தில் வீற்றிருக்கும் மும் முகங்களும் செந்நிறமும் உடையவர்.

29. சிம்ம விநாயகர்

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் ஆகியன உள்ள வலக்கரங்கள் நான்கும், தாமரை, ரத்தினகலசம்; மலர் கொப்பு, அபயம் ஆகியன உள்ள இடக்கரங்கள் நான் கும் சிங்க முகத்தையும் உடைய வெண்நிற மேனியர்.

30. யோக விநாயகர்

யோக ஆசனத்தில் யோக பட்டம் காட்டிக் கொண்டு யோக தண்டத்தில் வலக்கையூன்றி அக்கமாலை, பாசம், கரும்பு ஆகியவற்றைத் தரித்து நாற்கரமும் ஒருமுகமும் கொண்டு இந்திர நீலநிற ஆடை அணிந்த பாலசூரியன் போன்ற நிறத்தினர்.

Koviloor Digital Library

31. துர்க்கா விநாயகர்

தந்தம், அஸ்திரம், அக்கமாலை, அங்குசம், பாசம் கொடி, வில், நாவற்பழம் ஆகியவற்றை ஏந்திய எட்டுக் கரங்களும், செந்நிற ஆடையும் உடைய ஒற்றை, முகத்தவர்.

32. சங்கடஹர விநாயகர்

பாலசூர்யன் போன்ற நிறத்தினர், இடது தொடையில் பச்சை மேனியுடைய வளும் நீலமலரை ஏந்தியவளுமான தேவியை அமர்த்தியிருப்பவர், வரகம், அங்குசம் உடைய வலக்கரங்களும், பாசம், பாயச பாத்திரம் உடைய இடக்கரங்களும் உடையவராய் ஒற்றைமுகமும் நீலநிற ஆடையும் அணிந்து தாமரைப் பீடத்தில் இருப்பவர்.

Koviloor Digital Library

மஹா கணபதி பூஜை

மஹா கணபதியின் பூஜையை இருபத்தோரு பத்ரங்களைக் கொண்டு செய்ய வேண்டும்:

அவைகளாவன:

1. மாசீ பத்ரம் மாசி)
2. கரிசிலாங்கண்ணி (பிரங்கராஜபத்ரம்)
3. பில்வம் (பில்வ பத்ரம்)
4. அறுகு (தூர்வாயுக்மம்)
5. இலந்தை (பதரீ பத்ரம்)
6. ஊமத்தை (துர் தூர பத்ரம்)
7. துளசி (துளஸீ பத்ரம்)
8. நாயுருவி (கரமஞ்சீர பத்ரம்)
9. சிறுவழுதலை (ப்ரஹதீ பத்ரம்)
10. வன்னி (சமீ பத்ரம்)
11. மந்தாரை (தேவதார பத்ரம்)

Koviloor Digital Library

12. மருவு (மருவக பத்ரம்)
13. அரளி (கரவீர பத்ரம்)
14. சோங்கு (துரு மோற்பல பத்ரம்)
15. அரச இலை (அசுவத பத்ரம்)
16. வெள்ளெருக்கு (அர்க்க பத்ரம்)
17. மருதம் (அர்ஜ்ஜீன பத்ரம்]
18. விஷ்ணுக் ராந்தம் (விஷ்ணுக் ராந்தம்)
19 மாதுளை டாடிமீ பத்ரம்)
20. ஜாதி மல்லி (ஜாஜி பத்ரம்)
21. தாழை ஏகாசர பத்ரம்)

முல்லை இலை, தாழை இலை, கண்டங்கத்திரி இலை, தேவதாரு இலைகளையும் சேர்க்கலாம்.

கணபதி நமக்கு அருள் கூர்ந்து கொடுக்கும் இருபத்தேழு விதமான பலன்களாவன:

Koviloor Digital Library

1) தர்மம் 2) பொருள் 3) இன்பம் 4) சௌபாக்கியம் 5) கல்வி (அறிவு) 6) பெருந்தன்மை 7) நல்வாழ்வு 8) சௌந்தர்யம் (முகத்தில் கருணை, அகத்தில் சாந்து) 9) வீர்யலக்ஷ்மிகடாக்ஷம் 10) விஜயலக்ஷ்மி கடாக்ஷம 11) எல்லோரும் தன்னிடம் அன்பாயிருத்தல் (வசீகரம்) 12) கர்ப்பரக்ஷை 13) மக்கட்பேறு 14) நுண்ணறிவு (திக்ஷண்யம்) 15) நற்புகழ் (கீர்த்தி) 16) சோகத்திலும் மனம் வாடாநிலை (திடஞானம்) 17) அசுபங்களை அகற்றல் 18) வாக்கினல் எல்லோரும் அடங்கல் (சாதுர்யம்) 19) கோபம் கொண்டவர்களை சாந்தப்படுத்தும் தன்மை 20) பிறர் ஏவும் அபிசாரம் அடங்கி சாந்தி ஏற்படும் நிலை 21) எல்லாத்துயரமும் நீங்கல் - இப்படி இருபத்தொரு மோதகங்களை நைவேத்யம் செய்வதன் கருத்த மனித வாழவின் இலட்சியமும், இப்பிறவியும, பூரணத்தன்மையடையவும் துணை செய்வது இருபத்தொரு செய்கைகளாகும். அவைகளை நமக்குக் கொடுத்து அனுக்ரஹம் செய்யவேண்டி இருபத்தொரு மோதகங்களை அவருக்குச் சமர்ப்பிக்(படைக்)கிறோம்.